# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.107/2019 |
| Deposition Of Witness for | Prosecution PW 6<br>Defense<br>Court |
| Name | திரு. மனோகரன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of September 2025.

நான் மூன்றடைப்பில் வசித்து வருகிறேன். விவசாயம் பார்த்து வருகிறேன். காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. வழக்கின் எதிரியை தெரியாது. அ.சா.1 யை தெரியாது. வழக்கில் இறந்துபோன நபர்கள் குறித்து எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது. வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

29.08.2018 ஆம் தேதி இரவு 08.00 மணிக்கு சம்பவ இடமான கன்னியாகுமரியிலிருந்து திருநெல்வேலி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் மூன்றடைப்பு குமரன் காம்ப்ளக்ஸ் அருகில் உள்ள இடம் மற்றும் அதன் சுற்றுபுறங்களையும் காவல் ஆய்வாளர் உங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார்

செய்த போது உடன் இருந்து சாட்சியாக கையெழுத்து செய்துவிட்டு தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.107/2019 |
| Deposition Of Witness for | Prosecution PW 5<br>Defense<br>Court |
| Name | திரு. மாரிமுத்து |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of September 2025.

நான் அ.சாத்தான்குளத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரர். வழக்கில் இறந்துபோன வெள்ளபாண்டி, த/பெ. சுப்பையா, வெள்ளபாண்டி, த/பெ. பால்பாண்டி யை தெரியும். 29.08.2018 ம் தேதி சூரன்குடியிலிருந்து சாத்தான்குளத்திற்கு இறந்தநபர்கள் இருவரும் எக்ஸ்எல் வாகனத்தில் வரும்போது மூன்றடைப்பு குமரன் சில்க்ஸ் அருகில் உள்ள கிராஸிங்கில் வரும்போது கன்னியாகுமரியிலிருந்து வந்த கார் சர்வீஸ் ரோட்டின் மேல்புறம் விபத்து நடந்தது. நான் மேற்படி விபத்து நடந்ததாக கேள்விப்பட்டு விபத்து நடந்த மறுநாள் ஐகிரவுண்ட் மருத்துவமனைக்கு சென்றேன். போலீஸார் பிரேத விசாரணை மேற்கொள்ளும்போது நான் உடன் இருந்ததேன். போலீஸார் என்னை விசாரணை செய்தனர்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

திருநெல்வேலி மருத்துவமனையில் போலீஸார் என்னை விசாரணை செய்தபிறகு காவல்நிலையத்திற்கு வருமாறு அழைத்தார்கள் என்றால்

சரிதான். தாத்தாவும், பேரனும் அடிப்பட்டு இறந்தவிபரம் குறித்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்ததாக கேள்விப்பட்ட இடம் நான்குவழி தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். தேசியநெடுஞ்சாலையில் மேற்கிலிருந்து கிழக்காக இறந்த நபர்கள் இருசக்கர வாகனத்தில் குறுக்காக செல்லும்போது விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன் என்றால் சரிதான்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.107/2019 |
| Deposition Of Witness for | Prosecution PW 4<br>Defense<br>Court |
| Name | திரு. மந்திரம் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of September 2025.

நான் அ.சாத்தான்குளத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன வெள்ளபாண்டி, த/பெ. சுப்பையா, வெள்ளபாண்டி, த/பெ. பால்பாண்டி என்னுடைய உறவினர்கள். அ.சா.1 எனது உறவினர். தேதி ஞாபகமில்லை 2018 ஆண்டு ஆவணி மாதம் விபத்தில் இறந்துவிட்டார்கள். மூன்றடைப்பு அருகே மேற்படி நபர்கள் இருசக்கர வாகனத்தில் சென்றபோது விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டதாக கேள்விப்பட்டு மறுநாள் டிவிஎம்சி மருத்துவமனைக்கு சென்றேன். பிரேத விசாரணை மேற்கொள்ளும்போது நானும் உடன் இருந்தேன். போலீஸார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

பிரேத விசாரணை முடிந்தபிறகு என்னை காவல்நிலையத்திற்கு விசாரணைக்கு வரசொன்னார்கள் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன நபர்கள் குறித்து காவல்நிலையத்தில் வைத்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன

அ.சா.1ன் தந்தைக்கு வயது 75 க்கு மேல் இருக்கும் என்றால் வயது 70 இருக்கும்.

## DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

| | | |
|---|---|---|
| **IN THE COURT OF** | | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | } | CC.No.107/2019 |
| Deposition Of Witness for | { | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | | திரு. பேச்சிமுத்து |
| Husband Name / Father's Name | | |
| Village | | |
| Taluk | | |
| Religion | | Muslim/Christian/Hindu |
| Age | | /2025 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of September 2025.

நான் அ.சாத்தான்குளத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன வெள்ளபாண்டி, த/பெ. சுப்பையா, வெள்ளபாண்டி, த/பெ. பால்பாண்டி என்னுடைய பக்கத்துவீட்டுக்காரர்கள். அ.சா.1 எனது பக்கத்துவீட்டுக்காரர். 29.08.2018 ம் தேதி மதியம் 12.00 மணியளவில் மூன்றடைப்பு வடக்கு பஸ்ஸ்டாண்டில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது தெற்கு பக்கமாக கூட்டமாக இருந்தது. அதனால் நான் என்ன நடந்தது என பார்த்தேன். அப்போது தாத்தாவும், பேரனும் அடிபட்டு கிடந்தார்கள். தாத்தா சம்பவயிடத்தில் இறந்துவிட்டார். பேரனை மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். திருநெல்வேலியிலிருந்து தெற்கு நோக்கி சென்ற கார் இறந்துபோன நபர்கள் வந்த எக்ஸ்எல் வாகனத்தின் மீது மோதியதில் அவர்கள் இறந்துவிட்டார்கள். வண்டியை ஓட்டிய நபர் யார் என எனக்கு தெரியாது. வண்டியின் பதிவு எண் எனக்கு தெரியாது. எங்கள் ஊர் போஸ்ட் ஆபிஸ் தொலைபேசி நம்பர் என்னிடம் இருந்தது. போஸ்ட் ஆபிஸிற்கு தகவல்

தெரிவித்து அ.சா.1ற்கு தகவல் தெரிவிக்குமாறு சொன்னேன். போலீஸார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் சம்பவம் நடக்கும்போது வடக்கு மூன்றடைப்பு பஸ்ஸ்டாப்பில் நின்றிருந்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்தது தெற்கு மூன்றடைப்புஹ கிராஸிங்கில் என்றால் சரிதான். வடக்கு மூன்றடைப்பு பஸ்ஸ்டாப்பிலிருந்து சம்பவயிடத்திற்கு நடப்பதற்கு 10 நிமிடங்கள் ஆகும் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் கூட்டமாக கூடியிருந்ததால் நான் என்ன நடந்தது என பார்க்க சென்றேன் என்றால் சரிதான். நான் போகும்போது போலீஸார் சம்பவயிடத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் போவதற்கு முன்பே அ.சா.1ன் மகனை ஆம்புலன்ஸில் கொண்டுசென்றுவிட்டார்கள் என்றால் இல்லை, நான் வந்தபிறகு தான் கொண்டுசென்றார்கள். சம்பவம் நடந்த இடம் தென்வட ரோடு என்றால் சரிதான். சம்பவயிடம் வடக்கே, திருநெல்வேலி தெற்கே உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்தில் வைத்து போலீஸார் என்னை விசாரணை செய்தபிறகு என்னை போலீஸார் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது ஊர்க்காரர். சம்பவயிடத்திற்கு நான் போனதாக சொல்வது உண்மையில்லை என்றும், அ.சா.1 கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.107/2019 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | **திரு. கண்ணன்** |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யபட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of September 2025.

நான் அ.சாத்தான்குளத்தில் வசித்து வருகிறேன். வயது முதிர்வின் காரணமாக வேலைக்கு செல்லவில்லை. அ.சா.1 எனது ஊரைச்சார்ந்தவர். வழக்கில் இறந்துபோன வெள்ளபாண்டி, த/பெ. சுப்பையா, வெள்ளபாண்டி, த/பெ. பால்பாண்டி என்னுடைய உறவினர்கள். 29.08.2018 ம் தேதி நான் நான்குநேரி தாலுகா ஆபிஸிலிருந்து எனது ஊருக்கு பேருந்தில் சென்றுகொண்டிருந்தேன். அப்போது இரயில்வே கேட் தாண்டி எங்கள் ஊருக்கு செல்லும் இடத்தில் உள்ள கிராஸிங்கில் கூட்டமாக இருந்தது. நான் பேருந்திலிருந்து இறங்கி பார்த்தபோது, இரண்டு வெள்ளை பாண்டிகளும் இறந்துகிடந்தார்கள். அ.சா.1 ன் மகனை ஆம்புலன்ஸில் ஏற்றி டிவிஎம்சி மருத்துவமனைக்கு கொண்டுசென்றார்கள். மற்றொரு வெள்ளைபாண்டியை என்ன செய்தார்கள் என எனக்கு தெரியாது. விபத்து ஏற்படுத்திய நபர் மகேஷ்வரன் என தெரியும். இறந்தநபர்கள் இருவரும் டிவிஎஸ் எக்ஸ்எல் வாகனத்தில் ரோட்டை கடக்கும்போது வாகனம் அதிவேகமாக வந்து விபத்தை ஏற்படுத்தியது. மூன்றடைப்பு மெயின்ரோடு

அருகே மில் அருகே சம்பவம் நடைபெற்றது. சம்பவம் நடக்கும்போது காலை 11.00 மணி இருக்கும். சம்பவத்தை என்னுடன் யார் யார் பார்த்தார்கள் என எனக்கு தெரியாது. மேற்படி இருவருக்கும் எந்த இடத்தில் காயம் இருந்தது என எனக்கு தெரியாது. மறுநாள் அ.சா.1ன் மகன் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டு டிவிஎம்சி மருத்துவமனைக்கு சென்றேன். உடலை பெற்றுக்கொண்டோம். போலீஸார் என்னை விசாரணை செய்தனர்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

நான்குநேரி தாலுகா ஆபிஸிற்கு வந்து ஊருக்கு பேருந்தில் திரும்பும்போது விபத்து நடந்ததாக போலீஸார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறவில்லை. சம்பவயிடத்தில் கூட்டமாக இருந்ததால் நான் பேருந்தில் இருந்து இறங்கி சம்பவயிடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். நான் போகும்போது போலீஸார் சம்பவயிடத்தில் இருந்தார்கள் என்றும், அப்போது நான் போவதற்கு முன்பு அடிபட்டவர்களை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். பைக்கானது தென்வடரோட்டில் உள்ள மேற்கிலிருந்து கிழக்காக உள்ள கிராஸிங்கில் இருந்தது என்றால் சரிதான். விபத்தில் அடிப்பட்டவர்கள் என்பது யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் எங்கள் ஊர்க்காரர்கள் என்பதால் எனக்கு தெரியும். பால்துரை எனக்கு தம்பி, அ.சா.1 பால்துரையின் மனைவி. நான் பேருந்தில் செல்லும்போது சம்பவத்தை பார்த்ததாக கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.107/2019 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | திருமதி. மல்லிகா |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of September 2025.

நான் சாத்தான்குளத்தில் வசித்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன வெள்ளபாண்டி, த/பெ. சுப்பையா, வெள்ளபாண்டி, த/பெ. பால்பாண்டி என்னுடைய அப்பா மற்றும் என்னுடைய மகன். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஆவணி மாதம் 8 ம் தேதி எனது அப்பா மற்றும் என்னுடைய மகன் சூரன்குடியிலிருந்து சாத்தான்குளத்திற்கு எக்ஸ்எல் வண்டியில் வந்தார்கள். மூன்றடைப்பு மில் அருகே வரும்போது கார் தெற்கிலிருந்து வடக்காக வந்து எனது அப்பாவின் வண்டி மீது மோதியதில் எனது அப்பா சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். எனது மகனிற்கு காயம் ஏற்பட்டு திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டுசென்றதாக சொன்னார்கள். நான் எனது மகனை பார்க்கவில்லை. எனது அப்பாவை தான் பார்த்தேன். சம்பவம் நடக்கும்போது நான் வீட்டில் இருந்தேன். எனது கணவர்தான் எனக்கு தகவல் சொன்னார். எனது மகனுக்கு எந்தெந்த இடத்தில் காயம் இருந்தது என எனக்கு தெரியாது. சம்பவம் நடந்தது மதியம் 12.00 மணி எனக்கு மதியம் 02.00 மணியளவில் தகவல் வந்தது.

விபத்தை ஏற்படுத்திய காரை ஓட்டி வந்த நபர் எனக்கு தெரியாது. மேற்படி நடந்த சம்பவத்திற்கு நான் புகார் வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ.1** ஆகும். போலீஸார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து குறித்து தகவல் தெரிந்தவுடன் எங்கள் ஊர் இசக்கிமுத்து தேவர் மகன் கண்ணன், இசக்கிபாண்டி என்பவரின் மகன் பேச்சிமுத்து ஆகியோர் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். மருத்துவமனைக்கு நான் செல்வதற்கு முன்பாக போலீஸார் விசாரணை செய்துகொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். போலீஸார் என்னிடம் கையெழுத்து மட்டும் கேட்டார்கள், அதில் என்ன விபரம் எழுதியிருந்தது என எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதன்பிறகு என்னை போலீஸார் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.